**கொடபொல பிரதேச சபை - 2021**

---

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கொடபொல பிரதேச சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயற்பாட்டுக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகார சட்டத்தின் உப பிரிவு 172(1) மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, கொடபொல பிரதேச சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு கோட்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பிரதேச சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கு அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் பிரதேச சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் (6)(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் (6)(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ளன.

### 1.6 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் போது சபைக்கு சொந்தமான காணிகள் மற்றும் கட்டிடங்களை அபிவிருத்தி செய்தல் தொடர்பாக ரூபா 6,580,315 இற்கான பெறுமதியை மூலதனப்படுத்தியிருக்கவில்லை. | பிரதேச சபை அலுவலகத்தின் மேல் மாடியின் நிர்மாணவேலை கட்டம் I மற்றும் II இற்காக கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டது 2022 ஆண்டிலேயே. அதனை 2022 ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது மூலதனப்படுத்தப்படும் எனவும் கொஸ்மோதர விளையாட்டுத் திடல் அபிவிருத்திக்காக மீளாய்வாண்டின் முழுமையாக கொடுப்பனவு செய்யப்படவில்லை எனவும் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு கொடுப்பனவு மேற்கொண்ட பின்னர் 2022 ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது மூலதனப்படுத்தப்படும் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு உள்ளூராட்சி ஓய்வூதிய பங்களிப்புத் தொகைக்காக செலுத்த வேண்டிய ரூபா 4,492,028 தொகைக்காக பலவின கடன்கொடுத்தோரின் கீழ் ஏற்பாடுகள் மேற்கொண்டிருக்கவில்லை. | | |
| (இ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய பலவின செலவுகள் ரூபா 156,678 தொகைக்காக பலவின கடன்கொடுத்தோரின் கீழ் ஒதுக்கங்கள் மேற்கொண்டிருக்கவில்லை. | | |
| (ஈ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 211,496 பெறுமதியான பொதுப் பதிவேட்டு மற்றும் நுகர்வுத் தன்மையுள்ள உபகரண இருப்பு இயந்திர உபகரணங்கள், தளபாடங்கள் மற்றும் உபகரணங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | | |
| (உ) மீளாய்வாண்டின் போது நாட்குறிப்பு பதிவு இலக்கம் 43 இன் கீழ் கடந்த ஆண்டுகளில் கணக்கீடு செய்யப்படாத கடன்கொடுத்தோர் மீதிகள் நிதிக்கூற்றுக்களில் சீராக்கல் செய்த போது கடன்கொடுத்தோர் மீதிகள் 15 தொடர்பாக ரூபா 4,703,281 தொகை பலவினக் கடன்கொடுத்தோர் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. | 2022 ஆண்டிற்கான தயாரிக்கப்படும் நிதிக்கூற்றுக்களில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஊ) மீளாய்வாண்டில் செயற்படுத்தப்பட்டிருந்த 06 நிர்மாண வேலைகளுக்குரிய கடன்கொடுத்தோர் ஏற்பாடுகள் ரூபா 16,962,774 தொகை குறைவாக ஒதுக்கப்பட்டிருந்தது. | | |
| (எ) மீளாய்வாண்டில் பன்முகப்படுத்தப்பட்ட அபிவிருத்தி நிகழ்சித் திட்டம் மற்றும் கிராமிய பாதை அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் செயற்படுத்தப்பட்டிருந்த 09 நிர்மாண வேலைகளுக்குரிய ரூபா 2,229,469 இற்கான கடன்பட்டோர், கடன்கொடுத்தோர் ஏற்பாடுகள் மேற்கொண்டிருக்கவில்லை. | | |
| (ஏ) மீளாய்வாண்டின் போது பொது நிதிய ஏற்பாடுகள் மீது செயற்படுத்தப்பட்டிருந்த 07 நிர்மாண வேலைகளுக்குரிய தடுத்து வைத்தல் பணம் ரூபா 365,934 தொகை வைப்புக் கணக்கில் மற்றும் நிர்மாண வேலை கடன்கொடுத்தோரின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | | |

| | | |
|---|---|---|
| (ஐ) பிரதேச சபை உட்கட்டமைப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மீளாய்வாண்டின் போது செயற்படுத்தப்பட்டிருந்த 07 நிர்மாண வேலைகளுக்குரிய ரூபா 1,201,295 இற்கான பெறுமதி மூலதனக் கடன்பட்டோரின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஒ) மீளாய்வாண்டின் போது பிரதேச சபை உட்கட்டமைப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் செயற்படுத்தப்பட்டிருந்த 04 நிர்மாண வேலைகளுக்குரிய கூட்டுத்தொகை ரூபா 7,116,821 தொகைக்கான நிர்மாண வேலை கடன்பட்டோர் கணக்கில் குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | | |
| (ஓ) மீளாய்வாண்டில் செயற்படுத்துவதற்காக உடன்படிக்கை மேற்கொண்டிருந்த 03 நிர்மாண வேலைகள் தொடர்பாக ரூபா 1,158,129 தொகை கடன்கொடுத்தோர் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | 2022 ஆண்டிற்கான தயாரிக்கப்படும் நிதிக்கூற்றுக்களில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஔ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்த பரீட்சை மீதியில் அனைத்து வருமானங்கள் மற்றும் செலவுகள் உட்படுத்தப்பட்டிருக்கவில்லை. | | |

### 1.6.2 தொங்கல் கணக்கு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பல வருட காலம் முதல் முன்கொண்டு வந்து காணப்படும் ரூபா 64,848 இற்கான தொங்கல் கணக்கின் வரவு மீதியை இனங்கண்டு தீர்ப்பதற்காக மீளாய்வாண்டின் போது நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | தொங்கல் கணக்கு ஏற்படுவதற்கான காரணத்தை கண்டறிந்து எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | விரைவாக தீர்க்கப்படும் என. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் படி மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் வருமானத்தை மிகைத்த மீணடுவரும் செலவு ரூபா 4,599,517 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேர்மாறாக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினை மிகைத்த மீண்டுவரும் வருமானம் ரூபா 19,351,684 தொகையாகும்.

## 2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

### வீதவரி

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு 701 வீதவரி அலகுகள் காணப்பட்டதுடன் அவற்றில் 36 வீதவரி அலகுகள் தொடர்பாக ரூபா 165,984 இற்கான நிலுவை மீதி ஒன்று காணப்பட்டது. | நிலுவை வருமானம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | வீதவரி விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் 03 ஆம் பிரிவின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பகிரங்க பொது வழிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல் பொது மக்களின் சுகபோகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

## 3.1 ஒப்பந்த நிர்வாகத்தில் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது சபை நிதிய ஏற்பாடுகள் மீது கொங்கிரீட் வடிகால்கள் நிர்மாணிக்கும் போது பதப்படுத்தப்பட்ட பலகைகள் (Plywood) பயன்படுத்தப்பட்டு சட்டகங்கள் தயாரிப்பதற்காக Ct-36 இன் கீழ் அறிமுகப்படுத்தியிருந்த ரூபா 843 இற்கான விகிதத்திற்கு பதிலாக மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் அறிமுகப்படுத்தியிருந்த ST-057 மற்றும் ST-064 விகிதங்களை பயன்படுத்தியிருந்தமையால் 05 வடிகால்கள் நிர்மாணிக்கும் போது சட்டகங்கள் தயாரிப்பதற்காக 484.3 சதுர மீற்றர்களுக்காக ரூபா 165,742 தொகை மிகையாக செலுத்தப்பட்டிருந்தது. | பிரதான செயலாளரினால் வெளியிடப்பட்டிருந்த 03/2014 மற்றும் 2014 ஒக்தோபர் 15 திகதிய நிதிச் சுற்றறிக்கையின் மூலம் பாதை வேலைகளுக்காக மதிப்பீடுகள் தயாரிக்கும் போது வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பொது முகாமையாளரினால் அங்கீகரிக்கப்பட்டிருந்த அலகு விலைகள் பயன்படுத்தப்பட்டது என. | பொருத்தமான மற்றும் அனுகூலமான விகிதங்கள் பயன்படுத்தப்பட வேண்டும். |